විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM

## ஊடக வெளியீடு

# பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை வலுப்படுத்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் மேற்கொள்ளவுள்ள ஜெர்மனிக்கான பயணம்

ஜெர்மனியின் ஆசிய பசிபிக் வணிக சங்கத்தின் (OAV) பிரெமன் அலகினால் வழங்கப்பட்ட அழைப்பின் பேரில், வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான தொடர் கூட்ட அமர்வுகளில் பங்கேற்க வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் 2026, பெப்ரவரி 26 முதல் 27 வரையில் ஜெர்மனிக்கு விஜயமொன்றை மேற்கொள்கிறார்.

ஆசிய பசிபிக் வணிக சங்கத்தின் பிரெமன் அத்தியாயத்தின் 125வது ஆண்டு விழா தொடர்பான நிகழ்வுகளில், ஆசியாவிலிருந்து கௌரவ விருந்தினராகவும், சிறப்புரையாற்றுபவராகவும் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார். ஜெர்மனியத் தரப்பிலிருந்து அந்நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் டாக்டர் ஜோஹன் வடேபுல், சிறப்பு விருந்தினராகவும், சிறப்புரையாற்றுபவராகவும் கலந்துகொள்வார். ஜெர்மன்-ஆசிய வணிக உறவுகளை மேம்படுத்துவதற்கான மிகப்பெரிய ஜெர்மன் சங்கமாக ஜெர்மனியின் ஆசிய பசிபிக் வணிக சங்கம் விளங்குகிறது. மேலும், இச்சங்கமானது, ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் கவனம் செலுத்தும் ஜெர்மனிய வணிகத் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கிறது.

அமைச்சர் ஹேரத்தின், இவ்விஜயத்தின் போது அமைச்சர் வடேபுலுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கும், இலங்கை குறித்த வணிக வட்டமேசை மாநாட்டில் பங்கேற்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு**

**2026, பெப்ரவரி 25**

**Foreign Affairs**
විදේශ කටයුතු
வெளிநாட்டு அலுவல்கள்
**Republic Building, Colombo 1**
ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1
குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1
☎ 2 325 373/5, 2 207 200/7
cypher@mfa.gov.lk

**Foreign Employment**
විදේශ රැකියා
வெளிநாட்டு வேலைவாய்ப்பு
**17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5**
17 වන මහල, "මෙහෙවර පියෙස", නාරාහේන්පිට, කොළඹ 5
17 அவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேண்பிட்டி, கொழும்பு 5
☎ 2 331 200
info@mfe.gov.lk

**Tourism**
සංචාරක
சுற்றுலாத்துறை
**No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1**
අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1
இல.03, டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு (சர் ராசிக் ஃபரீத் மாவத்தை), கொழும்பு 1
☎ 2 381 798, 2 321 222
secretary@tourismmin.gov.lk